## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு, பராபவ ஆண்டு, வைகாசி மாதம் 12ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 33/2024**

**(CNR.No. TNNM-14-000708-2024)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

எருமப்பட்டி காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.390/2023)

எதிர்

துரைமுருகன்(எ)முருகன்,

த/பெ. ஜெயபால்

4/6, ஆதி திராவிடர் காலனி,

முட்டாஞ்செட்டி,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 19.11.2023 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 02.04.2024 |

| | | |
|---|---|---|
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு<br><br>பிணையில் சென்ற நாள் | கைது செய்யப்பட்ட நாள்: 21.11.2023<br>பிணையில் சென்ற நாள்: 09.12.2023 |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. |
| 5. | குவிமுச பிரிவு 240(ii) ன் கீழான கேள்வி | 10.06.2024 |
| 6. | எதிரியின் பதில் | பொய் வழக்கு |
| 7. | வழக்கின் விசாரணை தொ–டங்கிய நாள் | 25.06.2024 |
| 8. | சாட்சிகள் விசாரணை செய்யப்–பட்ட நாள் | (see table below) |

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|---|
| அ.சா.1 | பிரேமா | 25.06.2024 | 25.06.2024 |
| அ.சா.2 | கோபிநாத் | 25.06.2024 | 07.03.2026 |
| அ.சா.3 | வனிதா | 10.09.2024 | 10.09.2024 |
| அ.சா.4 | பழனிசாமி | 10.09.2024 | 10.09.2024 |
| அ.சா.5 | மாயவன் | 15.07.2025 | 15.07.2025 |
| அ.சா.6 | பிரசாந்த் | 23.09.2025 | 23.09.2025 |
| அ.சா.7 | இளையராஜா | 06.11.2025 | 06.11.2025 |
| அ.சா.8 | டாக்டர்.மோகன்குமார் | 17.03.2026 | 17.03.2026 |

| | | |
|---|---|---|
| | | அ.சா.9 மணிகண்டன் 17.04.2026 17.04.2026<br>அ.சா.10 சுப்ரமணியன் 15.05.2026 15.05.2026<br>அ.சா.11 பாலமுருகன் 22.05.2026 22.05.2026 |
| 9. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | 22.05.2026 |
| 10. | குவிமுச பிரிவு 313(1)(ஆ) ன் கீ–ழான கேள்வி | 25.05.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 26.05.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நி–ரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்–லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்–தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | – |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

இந்த வழக்கானது 02.04.2024–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. உதயாபானு, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பு வழக்–கறிஞர் திரு. R. மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 25.05.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீ–லிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**1)** அரசு தரப்பு வழக்கு யாதெனில், வழக்கின் வாதி பிரேமாவின் மகன் கோபிநாத்திற்கும் எதிரி முருகன் என்கிற துரைமுருகனின் அக்கா ரம்யாவிற்கு கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு திருமணமாகி இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்றும், இதனால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டு தற்போது ரம்யா எதிரி வீட்டில் வந்து தங்கியுள்ளதாக–வும், இந்நிலையில் 19.11.2023ந் தேதி மாலை 18.30 மணிக்கு வாதியின் மகன் சாட்சி–2 கோபிநாத் எதிரி முருகன் வீட்டிற்கு சென்று ரம்யாவிடம் லோன் வாங்க ஆதார்கார்டை கேட்டும் வீட்டிற்கு வருவமாறு அழைத்துள்ளதாகவும், அப்போது அங்கிருந்த எதிரி முருகன் என்கிற துரைமுருகன் வாதியின் மகனை பார்த்து ஏண்டா தேவடியா பயலே என் அக்கா வாழ்க்கையை கெடுத்திட்டு இங்க எதுக்குடா வர்ற என்று தகாத வார்த்தையால் திட்டியதாகவும், மேற்படி அதே தேதி, அதே இடம், அதே மணிக்கு சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி முருகன் (எ) துரைமுருகன் அருகில் கிடந்த தடியை எடுத்து சாட்சி–2 கோபிநாத்தின் தலையில் ஓங்கி அடித்தும் கை கால்களில் அடித்தும் சாட்சி–2 கோபிநாத்திற்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி அதே தேதி, அதே இடம், அதே மணிக்கு சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி முருகன் (எ)

துரைமுருகன் கையில் தடியை வைத்துக்கொண்டு வாதியின் மகன் சாட்சி-2 கோபிநாத்தை பார்த்து இன்னைக்கு தப்புச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், நிகழ் நிலை புகார் தரரான பிரேமா கொடுத்த புகாரின் பேரில் எருமப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 390/2023 ல் எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரி மீது பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**2)** இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 33/2024 ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்-றத்தில் முன்னிலையானவுடன், அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், எதிரிக்கு கு.வி.மு.ச 207-வது பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளன.

**3)** வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், கு.வி.மு.ச 173-ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து,

குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**4)** எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.11** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு,**அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.15** வரையிலான சான்றாவணங்க– ளும், அ.சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>**

**5.1. அ.சா.1 பிரேமா தனது சாட்சியத்தில்,** முத்தான் செட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், தனது கணவர் இறந்து 13 வருடடகள் ஆகிறது என்றும், எதிரியை தெரியும் என்றும், அவர் தனது உறவினர் என்றும், தனது மகனும் துரைமுருகனின் அக்கா ரம்யாவும் காதல் திருமணம் செய்து கொண்டதாகவும், தனது மகனுக்கும் தனது மருமகளுக்கும் இடையே பிரசச்னை ஏற்பட்டு கோபித்து கொண்டு துரைமுருகன் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், தனது மகன் ஒருமாதம் காலம் கூப்பிட சொல்லவில்லை என்றும், பின்னர் தனது மருமகளை கூப்பிட தனது மகன் சென்றதாகவும், ஒரு நாள் இரவு 07.00 மணிக்கு தானு் தனது மகனும் தங்கள் வீட்டில்இருந்த போது உறவினர் ஒருவர் வந்து துறைமுருகனும் இன்னும் சில நபர்களும் சேர்ந்து தனது மகன் கோபிநாத்தை அடித்து போட்டு விட்டார் என்று சொன்னதாகவும், தாங்கள் அங்கு சென்று என்ன நடந்தது என்று கேட்ட போது யாரும் பதில் சொல்லவில்லை என்றும் தனது மகனுக்கு பின் மண்டைடயிலும் நெற்றியின் முன்பக்கம் அடிப்பட்டிருந்ததாகவும், மூக்கில் ரத்தம் வந்ததாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் வரவும் அடிப்பட்ட தனது மகனை

ஆம்புலன்ஸ் மூலமாக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சன்றதாகவும், தனது மகனுக்கு பேச்சு மூச்சு இல்லை என்பதால் சேலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறியதாகவும், தாங்கள் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறியதாகவும், தாங்கள் சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்காக பாதிதூரம் அழைத்து சென்று விட்டு பின்ன்ா சேலத்தில் உள்ள தனியார் மருத்துவ மனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், 3 நாட்கள் தனது மகன் சிகிச்சையில் இருந்ததாகவும், சேலம் தனியார் மருததுவமனையில் இருந்தபோது போலீசார் தன்னை விசாரித்து நடந்ததை எழுதிக்கொண்டு தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

5.2. **அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில்** தான் தற்போது முட்டான்செட்டியில குடியிருந்து டிரைவராக தொழில் செய்து வருவதாகவும், அ.சா.1 தனது அம்மா என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும் அவர் தனது மனைவியின் தம்பி என்றும், 19.11.2023 ம் தேதி தனது மனைவி அவரது தம்பி வீட்டில் இருந்ததாகவும், தனக்கும் தனது மனைவிக்கு இடையே ஒரு சிறிய தகராறு ஏற்பட்டிருந்ததால் தனது மனைவி அவரது தம்பி வீட்டில் இருந்ததாகவும், 19.11.2023ம் தேதி L & T லோன் சம்பந்தமாக பேச போயிருந்ததாகவும், அப்போது எதிரி ஏற்கனவே இருந்த பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு அவரது நண்பர் குமார் மற்றும் குமார் மனைவி ரூபினி ஆகியோர்களை அழைத்து வந்து அக்கா வாழ்க்கை கெடுத்துவிட்டாயே தேவடியா பயலே என்று துரைமுருகன் தன்னை திட்டியதாகவும், குமார் தன்னை கையால் அடித்ததாகவும், தான் குமாரை அடித்ததால் துரைமுருகன் என் மாமாவை அடிக்கிறாயா என்று

சொல்லி பின் மண்டையில் அடித்ததாகவும், அதன் பின் கீழே தள்ளிவட்டு இரும்பு பைப்பால் நெற்றியின் மத்தியில் அடித்ததால் தான் சுயநினைவை இழந்து விட்டதாகவும், அதன் பின்னர் மறுநாள் தான் சுயநினைவு வந்ததாகவும், தனக்கு சுயநினைவு வந்த போது சேலம் நியூரோ மருத்துவ மனையில் இருந்ததகாவும், தன்னை அடித்தது குறித்து அக்கம் பக்கத்தில் இருப்பவர் தனது அம்மாவிற்கு தகவல் கொடுத்தும், 108 ஆம்புலன்சிற்கு ரங்கராஜ் என்பவர் தகவல் கொடுத்தும், தனது அம்மா மருத்துவமனையில் தன்னை சிகிச்சைக்காக சேர்த்தாக தெரிந்து கொண்டதாகவும், தான் 3 நாட்கள் மருத்துவமனையில் இருந்ததாகவும், பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து 24.11.2023 ம் தேதி வாக்குமூலம் அளித்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 வனிதா தனது சாட்சியத்தில்** தான் தற்போது முட்டான் செட்டியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருவதாகவும், சாட்சிகள் பிரேமா, கோபிநாத் ஆகியோர்களை தெரியும் என்றும், அவர்கள் உறவினர்கள் ஆவார்கள் என்றும், எதிரியை தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.4. அ.சா.4 பழனிசாமி தனது சாட்சியத்தில்** தான் தற்போது சேந்தமங்கத்தில் குடியிருந்து பெயின்டிங் வேலை செய்து வருவதாகவும், சாட்சிகள் பிரேமா, கோபிநாத் ஆகியோர்களை தெரியும் என்றும், அவர்கள் உறவினர்கள் ஆவார்கள் என்றும், எதிரியை தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.5. அ.சா.5 மாயவன் தனது சாட்சியத்தில்** ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வாதி பிரேமாவை தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்தஆவணத்தில் என்ன விபரம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டு கொண்டதால் இந்த கையொப்பம் தான் போட்டு கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 ன் மூலம் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**5.6. அ.சா.6 பிரசாந்த் தனது சாட்சியத்தில்** வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.7. அ.சா.7 இளையராஜா தனது சாட்சியத்தில்** ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வாதி பிரேமாவை தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த ஆவணத்தில் என்ன விபரம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டு கொண்டதால் இந்த கையொப்பம் தான் போட்டு கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ன் மூலம் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**5.8. அ.சா.8 டாக்டர். மோகன்குமார் தனது சாட்சியத்தில்** தான் கடந்த 19.11.2023ந் தேதி இரவு 10.55 மணிக்கு மருத்துவமனையில் பணியிலி-ருந்ததாகவும், அப்போது கோபிநாத் என்பவரை அவரது உறவினர் பாஸ்கர் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், கோபிநாத்தை விசாரித்த போது அதே தினத்தில் மாலை 07.00 மணியளவில் முட்டாஞ்செட்டியில் மூன்று தெரிந்த நபர்கள் மரக்கட்டையால் அடித்ததாக கூறியதாகவும், முதல் உதவி நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக தங்களது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்ததாகவும், அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் இருந்ததாகவும், 1. அவருக்கு கீழ் உதடு மற்றும் இடது முட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயங்கள் இருந்ததாகவும், 2. இடது நெற்றியில் 1 cm அளவுள்ள தையல் போடப்பட்ட காயம் இருந்ததாகவும், 3. தலையின் பின்புறத்தில் 2cm அளவில் தையல் போடப்பட்ட காயம் இருந்ததாகவும், 4. நெற்றியின் இருபுறமும் மற்றும் வலது கண்ணிற்கு மேல் இருக்கும் எலும்புகளில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது அதனால் வலது கண்ணை சுற்றி வீக்கம் இருந்ததாகவும், மேற்படி கோபிநாத்தை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கியதாகவும், 22.11.2023ம் தேதி கோபிநாத் சிகிச்சை முடிந்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும், 19.11.2023 முதல் 22.11.2023 வரை கோபிநாத்துக்கு வழங்கப்பட்ட சிகிச்சையின் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் 1 முதல் 3வரையிலான காயங்கள் சாதாரண காயம் என்றும் 4வது காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.8 ன் மூலம் சேலம் நியூரே பவுண்டேஷன் மருத்துவமனை விபத்து பதிவேட்டு ஆ.சா.ஆ.6 ஆகவும், சேலம் நியூரே பவுண்டேஷன் மருத்துவமனை காயச்சான்றிதழ் ஆ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**5.9. அ.சா.9 மணிகண்டன் தனது சாட்சியத்தில்** தான் கடந்த 19.11.2023ந் தேதி இரவு 07.30 மணிக்கு நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்ததாகவும், அப்போது கோபிநாத் என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்ததாகவும், கோபிநாத்தை விசாரித்த போது அவரை அன்றைய தினம் 19.11.2023ந் தேதி மாலை 06.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து தெரிந்த 2 நபர்கள் உருட்டுகட்டையால் தாக்கியதாக கூறியதாகவும், அவரை பரிசோதனை செய்த போது அவர் சுய நினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும், அவருக்கு 1. இடதுபக்க தலையில் 2x0.5x0.5cm அளவில் வெட்டு காயமும் 2. முன் நெற்றியில் 1x0.5x0.5cm அளவுள்ள வெட்டுகாயம் இருந்தது மூக்கில் இரத்த கசிவு இருந்ததாகவும், அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் அன்றைய தினமே மேல் சிகிச்சைக்காக சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 ன் மூலம் நாமக்கல் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.10. அ.சா.10 சுப்ரமணியன் தனது சாட்சியத்தில்** கடந்த 20.11.2023ம் தேதி எருமப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவ மனையில் இருந்த வரப்பெற்ற இன்டிமேஷனைப்பெற்று மருத்துவமனை சென்று மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்த கோபிநாத் வயது 29 த.பொ.கோபால் என்பவர் மயக்கநிலையில் இருந்ததால் அவர் அருகில் இருந்த அவரது அம்மா பிரேமா என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.390/2023க் கீழ் சட்டப்பிரிவு 294(b),

324, 506(ii) IPC ஆக 20.11.2023ம் தேதி 15.15 மணிக்கு வழக்கு பதிவு செய்து ஒரு நகலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்கலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவரின் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.10 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.11. அ.சா.11 பாலமுருகன் தனது சாட்சியத்தில்** தான் கடந்த 2023 முதல் 2024ம் வருடம் வரை எருமப்பட்டியில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 20.11.2023ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பி.சுப்ரமணியன் எருமப்பட்டி காவல்நிலைய அலுவலில் இருந்தபோது சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற கோபிநாத் என்பவரின் அடிதடி தகவலை பெற்று மருத்துவமனை சென்று பார்த்தபோது கோபிநாத் மயக்கநிலையில் இருந்ததால் அவரது அம்மா பிரேமாவிடம் சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.390/2023 இதச சட்ட பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை வழக்கின் புலன் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்ததாகவும், தான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 20.11.2023ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளையராஜா, மாயவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்ன அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 124 செ.மீ. அளவுள்ள தடி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பிரேமா, கோபிநாத், வனிதா, பிரசாந்த், பழனிசாமி, இளையராஜா, மாயவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் கடந்த 21.11.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு முட்டாஞ்செட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், 29.01.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.மணிகண்டன் மற்றும் மோகன்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கின் வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கப்பட்ட–தால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 294(b), 324, 506(ii) ல் இருந்து இதச 294(b), 326, 506(ii) ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கில் புலன் விசாரணையில் சம்பவத்தின்போது எதிரி ஆண்டி (எ) குமார் வாதியின் மகனை அடிக்கவோ, திட்டவோ இல்லை என்பது தெரியவந்ததால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச 294(b), 326, 506(ii)–ன் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.11 ன் மூலம் பார்வை மகஜர் அ.சா.ஆ.10 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.12 ஆகவும், படிவம் 91 ஆ.சா.ஆ.13 ஆகவும், 124 செ.மீ. அளவுள்ள தடி அ.சா.பொ.1 ஆகவும்,

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக, எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில்

நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

**10.1.** இவ்வழக்கில் முதலாவதாக எதிரி வாதியைப் மகனைப் பார்த்து ஆபாச வார்த்தைகளால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை பொருத்த வரையில் இவ்வழக்கின் வாதியான அ.சா.1 பிரேமா தனது புகாரில் கடந்த 19.11.2023ம் தேதி மாலை 06.30 மணிக்கு சாட்சி கோபிநாத் அவரது மனைவி ரம்யாவை திரும்ப கூட்டி வர அவரது வீட்டிற்கு சென்றபோது எதிரி துரைமுருகன் சாட்சி கோபிநாத்தை பார்த்து "ஏண்டா தேவிடியா பயலே என் அக்காவின் வாழ்க்கையை கெடுத்ததும் இல்லாம வந்து கூப்பிட வந்திட்டியா" என திட்டியதாக கூறியுள்ளார். மேலும் மேற்படி புகாரினை ஒத்து இவ்வழக்கில் சாட்சியமளித்துள்ளார். வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும் போது இவ்வழக்கின் வாதி சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சி என்பது தெரியவருகிறது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 60 ன் கீழ் வாய்மொழி சாட்சியமானது நேரடி சாட்சியமாகவே இருத்தல் வேண்டும். எனவே, அ.சா.1 வாதி பிரேமா சம்பவம் குறித்து கேள்வி நிலை சாட்சியம் என்பதால் அவரது சாட்சியத்தை கருத்தில் கொள்ள இயலாது.

**10.2.** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில் எதிரி துரைமுருகன் தன்னை "அக்கா வாழ்க்கையை கெடுத்து விட்டாயே தேவிடியா பயலே" என தகாத வார்த்தைகளால் திட்டியதாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

**10.3.** இவ்வழக்கின் மற்ற கண்ணுறு சாட்சிகளான அ.சா.3 வனிதா, அ.சா.4 பழனிசாமி, அ.சா.6 பிரசாந்த் ஆகியோர் தங்களுக்கு வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்து அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள்.

10.4. இவ்வழக்கில் பாதிக்கப்ட்ட சாட்சி எதிரி தன்னை ஆபாச வார்த்தைகளால் திட்டினார் என சாட்சியமளித்துள்ள நிலையில் இதச பிரிவு 294(b) ன் கீழான குற்றச்சாட்டிற்கு மற்றொரு முக்கிய மூலக்கூறான சம்பவமானது பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகாமையிலோ நடந்ததா என்பதை ஆராய வேண்டும்.

10.5. இவ்வழக்கில் அ.சா.ஆ.10 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் ஆகியவற்றை கவனமாக ஆராயும் போது சம்பவமானது சிமெண்ட் சாலையின் நடுவில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில் தனது மனைவி அவரது தம்பி வீட்டில் இருந்ததாகவும் தான் அங்கு சென்றபோது எதிரி தன்னை ஆபாச வார்த்தைகளால் திட்டியதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில், சம்பவயிடமானது எதிரியின் வீட்டில் அமைந்துள்ளது தெரிய வருகிறது. பொதுவாக ஒரு தனி நபரின் வீடானது எந்த காலத்திலும் பொது இடம் ஆகாது.

10.6. இவ்வழக்கில் எதிரி சாட்சி கோபிநாத்தை பார்த்து ஆபாச வார்த்தைகளால் திட்டினார் என்று அ.சா.2 கோபிநாத் சாட்சியமளித்துள்ள போதிலும் சம்பவம் நடந்த இடமானது எதிரி கோபிநாத்திற்கு சொந்தமான வீடு என்பதாலும், மேற்படி வீடானது பொது இடம் அல்ல என்பதாலும் எதிரி மீதான இதச பிரிவு 294(b) ன் கீழான குற்றச்சாட்டானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.7. இவ்வழக்கில் எதிரி தடியால் கோபிநாத்தின் தலையில் ஓங்கி அடித்தும் கைகால்களில் அடித்தும் சாட்சி கோபிநாத்திற்கு கொடுங்காயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டைப் பொருத்த வரையில் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சயான அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில்

"நான் குமாரை அடித்ததால் துரைமுருகன் என் மாமாவை அடிக்கிறாயா என்று சொல்லி பின் மண்டையில் அடித்தார். அதன் பின் கீழே தள்ளிவிட்டு இரும்பு பைப்பால் நெற்றியின் மத்தியில் அடித்ததால் நான் சுயநினைவை இழந்து விட்டேன்"

என சாட்சியமளித்துள்ளார்.

**10.8.** இவ்வழக்கின் மற்ற கண்ணுறு சாட்சிகளான அ.சா.3 வனிதா, அ.சா.4 பழனிசாமி, அ.சா.6 பிரசாந்த் ஆகியோர் தங்களுக்கு வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்து அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அ.சா.1 ன் சாட்சியத்தை மட்டுமே சார்ந்து அரசுதரப்பு வழக்கானது உள்ளது.

**10.9.** இந்நிலையில் வழக்காவணங்களை கவனமாக ஆராயும் போது எதிரிக்கும் சாட்சி கோபிநாத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வருவது தெரியவருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் அஸ்லாம் (எ) இம்ரான் எதிர் மத்திய பிரதேச அரசு **(2025 LiveLaw (SC) 365)** என்ற வழக்கில்

"முன் விரோதம் என்பது இருமுனை கத்தியாகும். ஒரு மு னையானது அது குற்றத்திற்கான நோக்கத்தை கொடுப்பதாக இருப் பினும் மற்றொரு முனையானது பொய் குற்றச்சாட்டுகளை எடுத்து ரைக்கும் என்பதை புறம்தள்ளி விட முடியாது"(மொழி பெயர்க்கப் பட்டது)

என கூறியுள்ளது. இவ்வழக்கில் எதிரிக்கும் சாட்சி கோபிநாத்திற்கும் முன் விரோதம் இருந்து வரும் நிலையில் இவ்வழக்கில் போய் குற்றச்சாட்டுகள் எடுத்துரைக்கப்பட வாய்ப்புள்ளதால் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மிக கவனத்துடன் பரிசீலிக்கப்படுதல் அவசியமாகும்.

**10.10.** இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரி தன்னை இரும்பு பைப்பால் அடித்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் மேற்படி சாட்சி கோபிநாத் தனது போலீசார் விசாரணையின் போது எதிரி தன்னை அருகில் கிடந்த தடியை எடுத்து அடித்ததாக கூறியுள்ளார். சாட்சி கோபிநாத் தனது போலீசார் விசாரணையின் போது எதிரி தன்னை தடியால் அடித்ததாக கூறி விட்டு பின்னிட்டு தனது சாட்சியத்தில் எதிரி தன்னை இரும்பு பைப்பால் அடித்தார் என குறியிருப்பது அரசுதரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைகிறது.

**10.11.** இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 கோபிநாத் மேற்படி கொடுங்காயத்தை ஏற்படுத்திய ஆயுதமாக இரும்பு பைப்பை குறிப்பிட்டுள்ள நிலையில் எதிரி துரைமுருகன் அடித்ததாக கூறப்படும் மரக்கட்டையானது கைப்பற்றப்பட்டு அரசுதரப்பில் அ.சா.பொ.1 சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது இவ்வழக்கின் முறையாக புலன் விசாரணை நடைபெற்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

**10.12.** மேலும், சாட்சி கோபிநாத் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது தன்னை தெரிந்த 2 நபர்கள் உருட்டுக் கட்டையால் தாக்கியதாக கூறினார் என்று அவருக்கு சிகிச்சையளித்த அ.சா.9 மருத்துவர்.மணிகண்டன் சாட்சியமளித்துள்ளார். மேலும், சாட்சி கோபிநாத் பின்னிட்டு சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது தன்னை தெரிந்த 3 நபர்கள் மரக்கட்டையால் தாக்கியதாக

கூறினார் என்று அவருக்கு சிகிச்சையளித்த அ.சா.8 மருத்துவர்.மோகன்குமார் சாட்சியமளித்துள்ளார்.

**10.13.** இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில் எதிரி துரைமுருகன் தன்னை இரும்பு பைப்பால் அடித்தார் என கூறியுள்ள நிலையில் தான் சிகிச்சையில் சேர்ந்த போது தெரிந்த நபர்கள் தன்னை உருட்டுக்கட்டையால் தாக்கியதாக கூறியிருப்பது அ.சா.2 சாட்சியத்தின் மீதான நம்பகத்தன்மையை குலைக்கிறது.

**10.14.** மேலும், அ.சா.2 கோபிநாத் தனது போலீசார் விசாரணையின் போது தன்னை எதிரி மட்டும் தான் அடித்தார் என கூறியுள்ள நிலையில் நாமக்கல் அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது தன்னை தெரிந்த 2 நபர்கள் உருட்டு கட்டையால் தாக்கியதாகவும், பின்னிட்டு சேலம் நியூரோ மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது தன்னை தெரிந்த 3 நபர்கள் மரக்கட்டையால் தாக்கியதாகவும் கூறியுள்ளது அ.சா.2 கோபிநாத் சம்பவத்தை முன்னுக்கு பின் முரணாகவும், மிகைப்படுத்தியும் கூறியுள்ளார் என்பது தெரியவருகிறது.

**10.15.** இவ்வழக்கில் அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளதாலும் மற்ற கண்ணுறு சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளதாலும் எதிரி மீதான இதச பிரிவு 326 ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10.16.** இவ்வழக்கில் மூன்றாவதாக சாட்சி கோபிநாத்தை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டைப் பொருத்த வரையில், இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட சாட்சி உட்பட எந்த சாட்சியும் எதிரி சாட்சி கோபிநாத்தை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரி மீதான இதச பிரிவு 506(ii) ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிக கவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான சி.பி எண் 18/2024 ஆக பெறப் பட்டுள்ள ஆ.சா.பொ.1 ஆன சுமார் 124 செ.மீ நீளமுள்ள தடி ஒன்றை மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டு காலம் முடிந்தவுடன் அழிக்க குவிமுச பிரிவு 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு

காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகி–றது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:32:17 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பிரேமா | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | கோபிநாத் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| 3 | அ.சா.3 | வனிதா | கண்ணுறு சாட்சி |
| 4 | அ.சா.4 | பழனிசாமி | கண்ணுறு சாட்சி |
| 5 | அ.சா.5 | மாயவன் | பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 6 | அ.சா.6 | பிரசாந்த் | கண்ணுறு சாட்சி |
| 7 | அ.சா.7 | இளையராஜா | பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 8 | அ.சா.8 | டாக்டர்.மோகன்குமார் | மருத்துவர் |
| 9 | அ.சா.9 | மணிகண்டன் | மருத்துவர் |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 10 | அ.சா.10 | சுப்ரமணியன் | பணி அதிகாரி |
| 11 | அ.சா.11 | பாலமுருகன் | புலன் விசாரணை அதிகாரி |

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள்—**</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் | அ.சா.5 |
| 3. | அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் | அ.சா.5 |
| 4. | அ.சா.ஆ.4 | பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் | அ.சா.7 |
| 5 | அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் | அ.சா.7 |
| 6 | அ.சா.ஆ.6 | சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனை விபத்து பதிவே—டு | அ.சா.8 |
| 7 | அ.சா.ஆ.7 | சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனை காயச்சான்றிதழ் | அ.சா.8 |
| 8 | அ.சா.ஆ.8 | நாமக்கல் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு | அ.சா.9 |
| 9 | அ.சா.ஆ.9 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.10 |
| 10 | அ.சா.ஆ.10 | பார்வை மகசர் | அ.சா.11 |

| | | | |
|---|---|---|---|
| 11 | அ.சா.ஆ.11 | மாதிரி வரைபடம் | அ.சா.11 |
| 12 | அ.சா.ஆ.12 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.11 |
| 13 | அ.சா.ஆ.13 | படிவம் 91 | அ.சா.11 |
| 14 | அ.சா.ஆ.14 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.11 |
| 15 | அ.சா.ஆ.15 | எதிரி நீக்கல் அறிக்கை | அ.சா.11 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்–**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.பொ.1 | 124 செ.மீ அளவுள்ள தடி | அ.சா.11 |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:32:25 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**பின்குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.

2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:32:31 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

CASE SUMMARY
CC-33/2024, Cr.No. 390/2023
(CNR.No. TNNM-14-000708-2025)
ERUMAPATTI POLICE STATION

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | 21.11.2023 |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 01.04.2024 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 10.06.2024 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code | Petitions: U/s.438 of Cr.P.C; Crl.M.P.No: 2095/2023; Result: Allowed |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | (see below) |
| vii | Date of examination of the accused under section 313(1)(b) of the Code | 25.05.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

Item v:

| Petitions | Crl.M.P.No | Result |
|---|---|---|
| U/s.438 of Cr.P.C | 2095/2023 | Allowed |

Item vi:

| Witness examined as | Date of Chief Examination | Date of Cross Examination |
|---|---|---|
| PW1-Prema | 25.06.2024 | 25.06.2024 |
| PW2-Gobinath | 25.06.2024 | 07.03.2026 |
| PW3-Vanitha | 10.09.2024 | 10.09.2024 |
| PW4-Palanisamy | 10.09.2024 | 10.09.2024 |
| PW5-Mayavan | 15.07.2025 | 15.07.2025 |
| PW6-Prasanth | 23.09.2025 | 23.09.2025 |
| PW7-Illaiyaraja | 06.11.2025 | 06.11.2025 |
| PW8-Dr.Mohankumar | 17.03.2026 | 17.03.2026 |
| PW9-Manikandan | 17.04.2026 | 17.04.2026 |
| PW10-Subramaniyan | 15.05.2026 | 15.05.2026 |
| PW11-Balamurugan | 22.05.2026 | 22.05.2026 |

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:32:37 +0530

Judicial Magistrate,
Sendamangalam.